# பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் பி.எல்.சி.

## முக்கிய தகவல்கள் ஆவணம்

## இஸ்லாமிய முதலீடுகள்

பதிப்பு – 2025-01

## 1. முக்கிய தகவல்கள் ஆவணம் - முதாரபாஹ் சேமிப்புகள்

| **கணக்கின் விபரம்** | **வாடிக்கையாளர்களுக்கான நன்மைகள்** | **கட்டணங்கள்.'. அறவீடுகள், தரகுப்பணம், இலாபம்** | **கணக்கை ஆரம்பிப்பதற்கான நடைமுறைகள்** | **பிரதான விதிகள் மற்றும் நிபந்தனைகள்** |
|---|---|---|---|---|
| இது அதிக இலாப விகிதத்தைக் கொண்ட ஒரு முதாரபாஹ் சேமிப்புக் கணக்காகும். வைப்பாளர்களுக்கு ஒரு சர்வதேச வீசா பற்று அட்டை வழங்கப்படும்.<br>வாடிக்கையாளர்கள் அதனைப் பயன்படுத்தி எந்த நேரத்திலும் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியும். | இலாபப் பணம் மாதாந்தம் கணக்கில் வரவு வைக்கப்படும்.<br><br>ஒன்லைன் வங்கிச் சேவை வசதிகள்.<br><br>நிலையான கட்டளை வசதி.<br><br>நாடெங்கும் பரந்த கிளை வலையமைப்பின் ஊடாக பண வைப்புகள் ∴ மீளப்பெறுதல்கள் மற்றும் பணப் பரிமாற்றங்களை இலகுவாகச் செய்யலாம்.<br><br>வீசா இயலுமை கொண்ட பற்று அட்டை மூலம் உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் 24 மணிநேரமும் உங்கள் கணக்குகளை அடையும் வசதி.<br><br>தகுதியுள்ள வைப்புப் பொறுப்புகள் அனைத்தும் நாணயச் சபையினால் அமுல்செய்யப்படும் வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஒரு வைப்பாளருக்கு ஆகக்கூடியதாக ரூ.1,100,000/ - என்ற அடிப்படையில் காப்பீடு செய்யப்பட்டுள்ளன. | ,லாபப் பகிர்வு விகிதத்தின் அடிப்படையில் இலாபம் பகிர்ந்தளிக்கப்படும்.<br><br>கணக்கின் குறைந்தபட்ச ஆரம்ப வைப்புத் தொகை ரூ. 1,000/ -<br><br>ATM அட்டைக்காக.ரூ. 400/ - அறவிடப்படும்<br><br>வருடாந்தக் கட்டணமாக ரூ. 400/ - அறவிடப்படும்<br><br>**நாள் ஒன்றிற்கான . ATM மீளப்பெறுதல் வரையறைகள்:**<br><br>**உள்நாட்டில் -**<br>ATM/ பற்று அட்டை மீளப்பெறுதல்கள் நாள் ஒன்றிற்கு ரூ. 100,000/ - வரை அல்லது கொள்வனவுகள் ரூ. 150,000/ - வரை<br>(POS மட்டும் / POS+ATM)<br><br>**வெளிநாட்டில் -**<br>ATM/பற்று அட்டை மீளப்பெறுதல்கள் நாள் ஒன்றிற்கு இ.ரூ. 100,000/ - வரை அல்லது கொள்வனவுகள் இ.ரூ.150,000/ - வரை<br>(POS மட்டும்/POS+ATM)<br><br>**ATM மீளப்பெறுதல்கள் அறவீடுகள் - ஒரு கொடுக்கல் வாங்கலுக்கு**<br>மக்கள் வங்கி: ரூ. 5.00 / -<br>ஏனைய வங்கிகள்: ரூ. 30.00/-<br>சர்வதேசம்: ரூ. 600.00/ - | **தனிநபர்**<br>முதாரபாஹ் சேமிப்பு ஆணையளிப்புப் படிவமும் ஒப்பந்தமும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.<br><br>வாடிக்கையாளர் விபர ஆய்வு அறிக்கை (CDD) தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதோடு, அவசியமான ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br><br>செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டையின் (தே.அ.அ.) அல்லது அது இல்லாவிடின் தே.அ.அ. இலக்கத்தைக் கொண்ட சாரதி அனுமதிப் பத்திரத்தின் (சா.அ.) அல்லது கடவுச்சீட்டின் (க.சீ.) பிரதியைச் சமர்ப்பிக்கவும்.<br><br>வசிப்பிட முகவரி தே.அ.அ. இல் அல்லது சா.அ.இல் உள்ளதைவிட வித்தியாசப்படின், முகவரியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணச் சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br><br>நியமத்தர் (Nominee) யார் என்பது உறுதிசெய்யப்பட வேண்டும் (தேவைப்படின்).<br><br>**நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புகள்** -<br>ஆணையளிப்புப் படிவம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.<br><br>வாடிக்கையாளரின் விபர ஆய்வு அறிக்கை (CDD)தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதோடு, அவசியமான ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | **தகுதி நிபந்தனை:**<br>செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டையை.'.சாரதி அனுமதிப்பத்திரத்தை.'.கடவுச்சீட்டை வைத்திருக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட ஒரு இலங்கைப் பிரஜை அல்லது வதிவிட வீசா வைத்திருப்பவர்.<br><br>**செயலற்ற.'.உறக்கநிலை கணக்குகள் பற்றிய கொள்கை:**<br>சேமிப்புக் கணக்கை வைத்திருப்பவர் ஒரு வருட காலத்திற்கு நிறுவனத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்யாவிடின், அக் கணக்கு ‘‘செயலற்ற’’ கணக்காக வகைப்படுத்தப்படும். அதனை மீளச் செயற்படுத்துவதற்கு வாடிக்கையாளரின் வேண்டுகோள் தேவை.<br><br>சேமிப்புக் கணக்கை வைத்திருப்பவர் பத்து வருட காலத்திற்கு அக் கணக்கு தொடர்பில் நிறுவனத்துடன் எவ்வித கொடுக்கல் வாங்கலும் செய்யாவிடின், அக் கணக்கு ‘‘உறக்கநிலை’’ கணக்காக வகைப்படுத்தப்படும். அதை மீண்டும் செயலுள்ளதாக்க வாடிக்கையாளரின் வேண்டுகோள் தேவை.<br><br>**ஏனைய நிபந்தனைகள்:**<br>கணக்கு வைப்பாளரின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது கணக்கு வைப்பாளரின் பெயர் மற்றும் கணக்கு இலக்கத்தை உள்ளடக்கியதாக பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் .'.பினான்ஸ் பி.எல்.சி.யின் பெயருக்கு எழுதப்பட்ட காசோலைகள் மட்டுமே நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்.<br><br>கணக்குப் புத்தகம் தொலைந்தால், அதற்குத் திருப்திகரமான விளக்கம் அளிக்கப்படுவதுடன் உரிய இழப்பீட்டுக் கட்டணமும் செலுத்தப்படும் பட்சத்தில் புதிய கணக்குப் புத்தகம் வழங்கப்படும்.<br><br>**சேமிப்புக் கணக்கொன்றை மூடுதல்.**<br>˚டுஊ ஆனது பின்வரும் சூழ்நிலைகளில் தனது சுய தீர்மானத்தின் பேரில் கணக்கொன்றை மூடிவிட முடியும்:<br>*வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க.<br>*கணக்கை மூடி, மீதியை வேறொரு கணக்கிற்கு மாற்றுவதற்காக.<br>*குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச மீதி பேணப்படாவிடின்.<br>*ஏதேனும் சட்டபூர்வ உத்தரவை நிறைவேற்றுவதற்கு, கணக்கிலுள்ள பணத்தை அனுப்பும்படி நீதி மன்றங்களினால் அல்லது கட்டளை ஒன்றினால் கோரப்படும்போது. |

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><th colspan="2">ATM மீதி விசாரணை அறவீடுகள் - ஒரு கொடுக்கல் வாங்கலுக்கு</th></tr>
<tr><td>மக்கள் வங்கி</td><td>இலவசம்</td></tr>
<tr><td>ஏனைய வங்கிகள்</td><td>ரூ. 7.50/ -</td></tr>
<tr><td>சா்வதேசம்</td><td>ரூ. 150.00/ -</td></tr>
</table>
கணக்கை மூடுவதற்கான அறவீடு இ.ரூ. 200 ஆகவிருக்கும்.
ரூ. 1,000/ -அல்லது அதற்குக் குறைந்த மீதி கொண்ட கணக்குகளுக்கு ரூ.25/ - அறவிடப்படும் (மீதி பூஜ்ஜியமானதும் கணக்கு கணனி அமைப்பின் ஊடாக தன்னியல்பாகவே மூடப்படும்)
*மூமேற்படி அறவீடுகள் அனைத்தும் நிறுவனத்தின் தனித் தீா்மானத்திற்கேற்ப காலத்திற்குக் காலம் மாற்றப்படலாம் என்பதைக் கவனத்திற்கொள்ளவும்.
</td><td>
வியாபாரப் பதிவு / கூட்டிணைப்புச் சான்றிதழ்.'. பதிவுச் சட்டத்தின் பிரதி / நிறுவன அமைப்பு விதிகள்இ சபைத் தீா்மானம், பயனடையும் உரித்தாண்மையின் பிரகடனம், பணிப்பாளா்களின் தரவு சேகரிப்புப் படிவங்கள் / அதிகாரபூா்வ கையொப்பதாரா்கள் கடிதம், அதிகாரபூா்வ கையொப்பதாரா்களின் அடையாள ஆவணங்கள், ஆதிகாரபூா்வ கையொப்பதாரா்கள் கடிதம், படிவம் 20.
முகவரியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணச் சான்றைச் சமா்ப்பிக்கவும் (சமா்ப்பிக்கப்படும் பயன்பாட்டுக் கட்டணப் பட்டியல் அல்லது வங்கி அறிக்கை நிறுவனத்தின் பெயரில் இருக்க வேண்டும்).
</td><td>
*கணக்கு தடை செய்யப்படலாம் அல்லது மூடப்படாலாம் என்று ஒழுங்குபடுத்தல் அமைப்பொன்றினால் பணிப்புரை வழங்கப்படும்போது..
முதாரபாஹ் சேமிப்புக் கணக்குகளின் மூடுதலுக்கு ரூ.200/ - என்ற கட்டணம் ஒன்று அறவிடப்பட வேண்டும்.
அதிகாரமற்ற அல்லது பொய்யான கொடுக்கல் வாங்கல்கள் தொடா்பான நடைமுறைகள்:
* வாடிக்கையாளா்கள் தமது ஒன்லைன் கடவுச்சொற்கள், பற்று ATM அட்டை PIN இலக்கம், சேமிப்புக் கணக்குப் புத்தகம் ஆகியவற்றைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு முழுப் பொறுப்பாளியாவாா்கள்.
* ஒரு வாடிக்கையாளரின் சேமிப்புக் கணக்கில் அதிகாரமற்ற அல்லது பொய்யான கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றால், உடனடி உதவிக்காக நிறுவனக் கிளையுடன் அல்லது துரித தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடா்புகொண்டு அறிவிக்க வேண்டுமென ஆலோசனை கூறப்படுகின்றது.
</td></tr>
</table>

*** வாடிக்கையாளா் முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறையை அறிய, ஆவணத்தின் கடைசிப் பக்கத்தைப் பாா்க்கவும்.

## 2. முக்கிய தகவல்கள் ஆவணம் - உஸ்ஃபூர் சிறுவர் சேமிப்புக் கணக்கு சேமிப்புகள்

| கணக்கின் விபரம் | வாடிக்கையாளர்களுக்கான நன்மைகள் | கட்டணங்கள்ஃ அறவீடுகள், தரகுப்பணம், இலாபம் | கணக்கை ஆரம்பிப்பதற்கான நடைமுறைகள் | பிரதான விதிகள் மற்றும் நிபந்தனைகள் |
|---|---|---|---|---|
| இக் கணக்கை 18 வயதிற்குக் கீழ்ப்பட்ட ஒரு பிள்ளையின் சார்பில் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒருவர் ஆரம்பிக்க முடியும். | இலாபப் பணம், இலாபப் பகிர்வு விகிதத்தின் அடிப்படையில் மாதாந்தம் கணக்கில் வரவு வைக்கப்படும்.<br><br>தகுதியுள்ள வைப்புப் பொறுப்புகள் அனைத்தும் நாணயச் சபையினால் அமுல்செய்யப்படும் வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஒரு வைப்பாளருக்கு ஆகக்கூடியதாக ரூ.1,100,000/- என்ற அடிப்படையில் காப்பீடு செய்யப்பட்டுள்ளன. | இலாபம், இலாபப் பகிர்வு விகித அடிப்படையில் பகிர்ந்துகொள்ளப்படும்.<br><br>கணக்கின் குறைந்தபட்ச ஆரம்ப வைப்புத் தொகை இ.ரூ. 250/-<br><br>கணக்கை மூடுவதற்குக் கட்டணம் எதுவுமில்லை.<br><br>*சகல அறவீடுகளும் நிறுவனத்தின் தனித் தீர்மானத்திற்கேற்ப காலத்திற்குக் காலம் மாற்றப்படலாம் என்பதைக் கவனத்திற்கொள்ளவும். | பெற்றோரினால்ஃபாதுகாவலரினால் முறைப்படி கையொப்பமிடப்பட்ட சேமிப்பு ஆணையளிப்புப் படிவமும் ஒப்பந்தமும்.<br><br>வாடிக்கையாளர் விபர ஆய்வு அறிக்கை (CDD) தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதோடு, அவசியமான ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br><br>முறைப்படி கையொப்பமிடப்பட்ட பெற்றோரின் /பாதுகாவலரின் ஒத்திவைக்கப்பட்ட வரிப் பிரகடனம் (ஏற்புடையதாயின்)<br><br>பிள்ளையின் பிறப்புச் சான்றிதழின் பிரதி ஒன்றைச் சமர்ப்பிக்கவும்..<br><br>பெற்றோரின்/பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டையின் (தே.அ.அ.) பிரதியை அல்லது அது இல்லாவிடின் தே.அ.அ. இலக்கத்தைக் கொண்ட சாரதி அனுமதிப் பத்திரத்தின் (சா.அ.) அல்லது கடவுச்சீட்டின் (க.சீ.) பிரதியைச் சமர்ப்பிக்கவும்.<br><br>பெற்றோரின்/பாதுகாவலரின் வசிப்பிட முகவரி தே.அ.அ. இல் அல்லது சா.அ.இல் உள்ளதைவிட வித்தியாசப்படின், முகவரியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணச் சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br><br>நியமத்தர் (Nominee) யார் என்பது உறுதிசெய்யப்பட வேண்டும் (தேவைப்படின்). | **தகுதி நிபந்தனை:**<br><br>18 வயதிற்கு மேற்பட்ட ஒரு இலங்கைப் பிரஜை அல்லது வதிவிட வீசா வைத்திருப்பவர்.<br><br>**ஏனைய நிபந்தனைகள்:**<br><br>செல்லுபடியாகும் ஆவணங்களின் அடிப்படையில் கல்வி மற்றும் மருத்துவச் செலவு போன்ற ஏதேனும் முக்கிய காரணத்திற்காக மட்டும், வைப்பாளரின் கையொப்பத்துடன், நிறுவனத்தின் தீர்மானத்திற்கேற்ப மீளப்பெறுதல்கள் அனுமதிக்கப்படும்.<br><br>சிறுவர்கள் 18 வயதை அடைந்ததும் இக் கணக்கிலுள்ள பணத்தை மீளப்பெறலாம் அல்லது இக் கணக்கை ஒரு வழமையான சேமிப்புக் கணக்காக மாற்றிக்கொள்ளலாம்.<br><br>"உஸ்ஃபூர்" சிறுவர் சேமிப்புக் கணக்குகளை மூடுவதற்குக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.<br><br>சிறுவர் சேமிப்புக் கணக்கு ஒரு வழமையான (வளர்ந்தோர்) சேமிப்பு கணக்காக மாற்றப்பட்ட பின்னர் உறக்கநிலைக் கொள்கை பிரயோகிக்கப்படும்.<br><br>கணக்கு வைப்பாளரின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது கணக்கு வைப்பாளரின் பெயர் மற்றும் கணக்கு இலக்கத்தை உள்ளடக்கியதாக பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் பி.எல்.சி.யின் பெயருக்கு எழுதப்பட்ட காசோலைகள் மட்டுமே நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்.<br><br>கணக்குப் புத்தகம் தொலைந்தால், பெற்றோரினால்/ பாதுகாவலரினால் அதற்குத் திருப்திகரமான விளக்கம் அளிக்கப்படுவதுடன் உரிய இழப்பீட்டுக் கட்டணமும் செலுத்தப்படும் பட்சத்தில் புதிய கணக்குப் புத்தகம் வழங்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | **அதிகாரமற்ற அல்லது தவறான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான நடைமுறைகள்:**<br><br>* வாடிக்கையாளர்கள் தமது கணக்குப் புத்தகங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு முழுப் பொறுப்பாளியாவர்கள்.<br><br>* ஒரு வாடிக்கையாளரின் சேமிப்புக் கணக்கில் அதிகாரமற்ற அல்லது பொய்யான கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றால், உடனடி உதவிக்காக நிறுவனக் கிளையுடன் அல்லது துரித தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்புகொண்டு அறிவிக்க வேண்டுமென ஆலோசனை கூறப்படுகின்றது. |

*** வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறையை அறிய, ஆவணத்தின் கடைசிப் பக்கத்தைப் பார்க்கவும்.

### 3. முக்கிய தகவல்கள் ஆவணம் - முதாரபாஹ் நிலையான முதலீடு

<table>
<tr>
<th>கணக்கின் விபரம்</th>
<th>வாடிக்கையாளர்களுக்கான நன்மைகள்</th>
<th>கட்டணங்கள்.'. அறவீடுகள், தரகுப்பணம், இலாபம்</th>
<th>கணக்கை ஆரம்பிப்பதற்கான நடைமுறைகள்</th>
<th>பிரதான விதிகள் மற்றும் நிபந்தனைகள்</th>
</tr>
<tr>
<td>PLC முதாரபாஹ் நிலையான முதலீடு.<br>இந்த முதலீடு. இலாபப் பகிர்வுக் கோட்பாடுகளின் அடிப்படையிலானது.<br>முன்கூட்டியே இணங்கப்பட்ட விகிதத்திற்கேற்ப இலாபம் பகிர்ந்துகொள்ளப்படும்.<br>.</td>
<td>3, 6 அல்லது 12 மாதங்களைக் கொண்ட காலப்பகுதியின் அடிப்படையில் கவர்ச்சியான இலாபப் பகிர்வு வழங்கப்படும்.<br><br>வாடிக்கையாளரின் தெரிவுக்கு அமைவாக, இலாபம் முதிர்ச்சியில், காலாண்டு தோறும் அல்லது மாதாந்தம் வழங்கப்படும்.<br><br>தகுதியுள்ள வைப்புப் பொறுப்புகள் அனைத்தும் நாணயச் சபையினால் அமுல்செய்யப்படும் வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஒரு வைப்பாளருக்கு ஆகக்கூடியதாக ரூ.1,100,000/- என்ற அடிப்படையில் காப்பீடு செய்யப்பட்டுள்ளன.</td>
<td>இலாபம், இலாபப் பகிர்வு விகித அடிப்படையில் பகிர்ந்துகொள்ளப்படும்.<br><br>மூசகல அறவீடுகளும் நிறுவனத்தின் தனித் தீர்மானத்திற்கேற்ப காலத்திற்குக் காலம் மாற்றப்படலாம் என்பதைக் கவனத்திற்கொள்ளவும்.</td>
<td>தனிநபர்<br>நிலையான வைப்பு ஆணையளிப்புப் படிவமும் ஒப்பந்தமும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.<br><br>வாடிக்கையாளர் விபர ஆய்வு அறிக்கை (CDD) தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதோடு, அவசியமான ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br><br>முறைப்படி கையொப்பமிடப்பட்ட ஒத்திலைக்கப்பட்ட வரிப் பிரகடனத்தைச் சமர்ப்பிக்கவும் (ஏற்புடையதாயின்)<br><br>செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டையின் (தே.அ.அ.) அல்லது அது இல்லாவிடின்<br>தே.அ.அ. இலக்கத்தைக் கொண்ட சாரதி அனுமதிப் பத்திரத்தின் (சா.அ.) அல்லது கடவுச்சீட்டின் (க.சீ.) பிரதியைச் சமர்ப்பிக்கவும்.<br><br>வசிப்பிட முகவரி தே.அ.அ. இல் அல்லது சா.அ.இல் உள்ளதைவிட வித்தியாசப்படின், முகவரியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணச் சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br><br>நியமத்தர் (ழேஅநைந) யார் என்பது உறுதிசெய்யப்பட வேண்டும் (தேவைப்படின்).<br><br>நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புகள் -<br>நிலையான வைப்பு ஆணையளிப்புப் படிவம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.</td>
<td>தகுதி நிபந்தனை:<br><br>தனிநபர்<br>செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டையை.'.சாரதி அனுமதிப்பத்திரத்தை.'.கடவுச்சீட்டை வைத்திருக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட ஒரு இலங்கைப் பிரஜை அல்லது வதிவிட வீசா வைத்திருப்பவர்.<br>நிறுவனம்<br>இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புகள்.<br>செயலற்ற கணக்குகள் பற்றிய கொள்கை:<br>ஒவ்வொரு நிலையான வைப்புப் பிரிவிலும், கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்ச்சியான காலத்திற்கு வைப்பாளர் ஒருவரிடமிருந்து நிறுவனத்திற்கு எழுத்துமூல தொடர்பாடல் எதுவும் கிடைக்காவிட்டால் அல்லது புதிய செயற்பாட்டு அறிவுறுத்தல்கள் எதுவும் வழங்கப்படாவிட்டால், அத்தகைய கணக்கு "செயலற்ற முதலீடாக" வகைப்படுத்தப்படும்.
<table>
<tr><th>பிரிவு</th><th>இக் காலப்பகுதிக்குப் பின் வைப்பு "செயலற்றதாக" வகைப்படுத்தப்படும்.</th></tr>
<tr><td>01 முதல் 13 மாதங்கள்</td><td>வைப்பு ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருடங்கள்.</td></tr>
</table>
<br>ஏனைய நிபந்தனைகள்:<br><br>முதிர்ச்சி முதலீடுகளுக்கான (வருடாந்தம் இலாபம் வழங்கும் முதாரபாஹ் முதலீடு) ஆரம்ப வைப்பு 10,000/-. மாதாந்த முதலீடுகளுக்கான (மாதாந்தம் இலாபம் வழங்கும் முதாரபாஹ் முதலீடு) ஆரம்ப வைப்பு 100,000/-.<br><br>முதலீடு முதிர்ச்சியடைவதற்கு முன் மீளப் பெறப்பட்டால், வழங்கப்படும் இலாபத் தொகை ஒப்புக்கொள்ளப்பட்டதைவிட குறைந்த விகிதத்தில் கணிக்கப்படும்.</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வாடிக்கையாளரின் விபர ஆய்வு அறிக்கை (CDD) தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதோடு, அவசியமான ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br><br>வியாபாரப் பதிவு / கூட்டிணைப்புச் சான்றிதழ;/ பதிவுச் சட்டத்தின் பிரதி / நிறுவன அமைப்பு விதிகள்இ சபைத் தீர்மானம், பயனடையும் உரித்தாண்மையின் பிரகடனம், பணிப்பாளர்களின் தரவு சேகரிப்புப் படிவங்கள் / அதிகாரபூர்வ கையொப்பதாரர்கள் கடிதம், அதிகாரபூர்வ கையொப்பதாரர்களின் அடையாள ஆவணங்கள், ஆதிகாரபூர்வ கையொப்பதார்கள் கடிதம், படிவம் 20.<br><br>முகவரியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணச் சான்றைச் சமர்ப்பிக்கவும் (சமர்ப்பிக்கப்படும் பயன்பாட்டுக் கட்டணப் பட்டியல் அல்லது வங்கி அறிக்கை நிறுவனத்தின் பெயரில் இருக்க வேண்டும்). | வாடிக்கையாளருக்கு மாதாந்தம் இலாபம் வழங்கப்பட்ட முதலீடு ஒன்றை முதிர்ச்சிக்கு முன்பே மீளப்பெற வேண்டுகோள் விடுக்கப்பட்டால், குறிப்பிட்ட காலப்பகுதிக்கு இலாபம் வழங்கப்பட மாட்டாது.<br><br>வைப்பிலிடப்பட்ட திகதியிலிருந்து 30 தினங்களுக்குள் (வைப்பிலிடப்பட்ட திகதி உட்பட மற்றும் மீளப்பெறும் திகதி நீங்கலாக) முதலீடு மீளப்பெறப்பட்டால், இலாபம் எதுவும் வழங்கப்பட மாட்டாது.<br><br>வைப்புச் சான்றிதழ் தொலைந்தால், அதற்குத் திருப்திகரமான விளக்கம் அளிக்கப்படுவதுடன் உரிய இழப்பீட்டுக் கட்டணமும் செலுத்தப்படும் பட்சத்தில் புதிய சான்றிதழ் வழங்கப்படும். |

*** வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறையை அறிய, ஆவணத்தின் கடைசிப் பக்கத்தைப் பார்க்கவும்.

.

## 4. முக்கிய தகவல்கள் ஆவணம் - வகாலா முதலீடு

<table>
<tr><th>கணக்கின் விபரம்</th><th>வாடிக்கையாளர்களுக்கான நன்மைகள்</th><th>கட்டணங்கள்/ அறவீடுகள், தரகுப்பணம், இலாபம்</th><th>கணக்கை ஆரம்பிப்பதற்கான நடைமுறைகள்</th><th>பிரதான விதிகள் மற்றும் நிபந்தனைகள்</th></tr>
<tr>
<td>PLC வகாலா முதலீடு<br><br>ஒரு நபர் (முவக்கில்) 'ரிஆவுக்கு அமைவான வியாபாரத்தில் தான் முதலீடு செய்யும் பணத்தை நிர்வகிப்பதற்காக பிரதிநிதி ஒருவரை (வக்கீல்) நியமிக்கும் வகையில் செய்துகொள்ளும் ஒப்பந்தம் இதுவாகும்.</td>
<td>1 மாதத்தில் தொடங்கி 2, 3, 6, 12, 13, 15, 18, 24, 26 மற்றும் 36 மாதங்கள் வரையிலான காலப்பகுதியின் அடிப்படையில் எதிர்பார்க்கப்படும் இலாப வீதங்கள் அமைந்திருக்கும்.<br><br>வாடிக்கையாளரின் தெரிவுக்கு அமைவாக, இலாபம் முதிர்ச்சியில் அல்லது மாதாந்தம் வழங்கப்படும்.<br><br>தகுதியுள்ள வைப்புப் பொறுப்புகள் அனைத்தும் நாணயச் சபையினால் அமுல்செய்யப்படும் வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஒரு வைப்பாளருக்கு ஆகக்கூடியதாக ரூ.1,100,000/- என்ற அடிப்படையில் காப்பீடு செய்யப்பட்டுள்ளன.</td>
<td>எதிர்பார்க்கப்படும் இலாப விகிதத்தின் அடிப்படையில் இலாபம் பகிர்ந்துகொள்ளப்படும்.</td>
<td>தனிநபர்<br>வகாலா ஆணையளிப்புப் படிவமும் ஒப்பந்தமும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.<br><br>வாடிக்கையாளர் விபர ஆய்வு அறிக்கை (CDD) தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதோடு, அவசியமான ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br><br>முறைப்படி கையொப்பமிடப்பட்ட இடைநிறுத்தி வைக்கப்பட்ட வரிப் பிரகடனத்தைச் சமர்ப்பிக்கவும் (ஏற்புடையதாயின்)<br><br>செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டையின் (தே.அ.அ.) அல்லது அது இல்லாவிடின் தே.அ.அ. இலக்கத்தைக் கொண்ட சாரதி அனுமதிப் பத்திரத்தின் (சா.அ.) அல்லது கடவுச்சீட்டின் (க.சீ.) பிரதியைச் சமர்ப்பிக்கவும்.<br><br>வசிப்பிட முகவரி தே.அ.அ. இல் அல்லது சா.அ.இல் உள்ளதைவிட வித்தியாசப்படின், முகவரியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணச் சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br><br>நியமத்தர் (ழேஅநைந) யார் என்பது உறுதிசெய்யப்பட வேண்டும் (தேவைப்படின்).<br><br>நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புகள் -<br>வகாலா ஆணையளிப்புப் படிவம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.</td>
<td>தகுதி நிபந்தனை:<br><br>தனிநபர்<br>செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டையை.்.சாரதி அனுமதிப்பத்திரத்தை.்.கடவுச்சீட்டை வைத்திருக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட ஒரு இலங்கைப் பிரஜை அல்லது வதிவிட வீசா வைத்திருப்பவர்.<br><br>நிறுவனம்<br>இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புகள்.<br><br>.<br>செயலற்ற கணக்குகள் பற்றிய கொள்கை:<br>ஒவ்வொரு வகாலா முதலீட்டுப் பிரிவிலும், கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்ச்சியான காலத்திற்கு வைப்பாளர் ஒருவரிடமிருந்து நிறுவனத்திற்கு எழுத்துமூல தொடர்பாடல் எதுவும் கிடைக்காவிட்டால் அல்லது புதிய செயற்பாட்டு அறிவுறுத்தல்கள் எதுவும் வழங்கப்படாவிட்டால், அத்தகைய கணக்கு “செயலற்ற வகாலா முதலீடாக” வகைப்படுத்தப்படும்.<br><br>
<table>
<tr><th>பிரிவு</th><th>இக் காலப்பகுதிக்குப் பின் வைப்பு “செயலற்றதாக” வகைப்படுத்தப்படும்.</th></tr>
<tr><td>01 முதல் 13 மாதங்கள்</td><td>வைப்பு ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருடங்கள்.</td></tr>
<tr><td>18 மற்றும் 24 மாதங்கள்</td><td>வைப்பு ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து நான்கு (04) வருடங்கள்.</td></tr>
<tr><td>36 மாதங்கள்</td><td>வைப்பு ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு (06) வருடங்கள்.</td></tr>
<tr><td>48 மற்றும் 60 மாதங்கள்</td><td>வைப்பு ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து எட்டு (08) வருடங்கள்.</td></tr>
</table>
</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வாடிக்கையாளரின் விபர ஆய்வு அறிக்கை (CDD) தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதோடு, அவசியமான ஆவணங்களும் சமா்ப்பிக்கப்பட வேண்டும்.<br><br>வியாபாரப் பதிவு / கூட்டிணைப்புச் சான்றிதழ்∴ பதிவுச் சட்டத்தின் பிரதி / நிறுவன அமைப்பு விதிகள்இ சபைத் தீர்மானம், பயனடையும் உரித்தாண்மையின் பிரகடனம், பணிப்பாளர்களின் தரவு சேகரிப்புப் படிவங்கள் / அதிகாரபூர்வ கையொப்பதாரர்கள் கடிதம், அதிகாரபூர்வ கையொப்பதாரர்களின் அடையாள ஆவணங்கள், ஆதிகாரபூர்வ கையொப்பதார்கள் கடிதம், படிவம் 20.<br><br>முகவரியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணச் சான்றைச் சமா்ப்பிக்கவும் (சமா்ப்பிக்கப்படும் பயன்பாட்டுக் கட்டணப் பட்டியல் அல்லது வங்கி அறிக்கை நிறுவனத்தின் பெயரில் இருக்க வேண்டும்). | **ஏனைய நிபந்தனைகள்:**<br>மாதாந்தம் அல்லது முதிர்ச்சியில் இலாபம் வழங்கப்படும் முதலீட்டுக்கான குறைந்தபட்ச ஆரம்ப முதலீடு ரூ.10,000,000/-.<br><br>வகாலா முதலீடு முதிர்ச்சியடைவதற்கு முன் மீளப் பெறப்பட்டால், வழங்கப்படும் இலாபத் தொகை எதிர்பார்க்கப்பட்டதைவிட குறைந்த விகிதத்தில் கணிக்கப்படும்.<br><br>வகாலா முதலீடு ஒன்றை முதிர்ச்சிக்கு முன்பே மீளப்பெற வேண்டுகோள் விடுக்கப்பட்டால், அந்த வேண்டுகோள் விடுக்கப்படும் வரை வாடிக்கையாளருக்கு மாதாந்தம் இலாபம் வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில், முன்கூட்டிய மீளப் பெறுதலுக்கான அறவீடுகள் ஆரம்ப முதலீட்டுத் தொகையிலிருந்து கழிக்கப்படும்.<br>வைப்பிலிடப்பட்ட திகதியிலிருந்து 30 தினங்களுக்குள் (வைப்பிலிடப்பட்ட திகதி உட்பட மற்றும் மீளப்பெறும் திகதி நீங்கலாக) வகாலா முதலீடு மீளப்பெறப்பட்டால், இலாபம் எதுவும் வழங்கப்பட மாட்டாது.<br>வைப்புச் சான்றிதழ் தொலைந்தால், அதற்குத் திருப்திகரமான விளக்கம் அளிக்கப்படுவதுடன் உரிய இழப்பீட்டுக் கட்டணமும் செலுத்தப்படும் பட்சத்தில் புதிய சான்றிதழ் வழங்கப்படும். |

*** வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறையை அறிய, ஆவணத்தின் கடைசிப் பக்கத்தைப் பார்க்கவும்.

## முறைப்பாடு கையாளல் செயன்முறை

**வாடிக்கையாளர்களுக்கு முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கு பின்வரும் முறைகள் காணப்படுகின்றன.**

- சம்பந்தப்பட்ட கிளை முகாமையாளரினூடாக
- நேரடியாக முறைப்பாடளித்தல் – வாடிக்கையாளர் ஒருவர், பணி நேரத்தில் நேரடியாக, இல. 1161, மருதானை வீதி, கொழும்பு 08 எனும் முகவரியில் அமைந்துள்ள தலைமையகத்தின், வாடிக்கையாளர் சேவை மற்றும் முரண் தீர்த்தல் பிரிவில், கடிதம் மூலமாக முழு விபரங்களையும் சமர்ப்பித்து முறைப்பாட்டை பதிவு செய்யலாம்.
- மின்னஞ்சல்: customerservices@plc.lk
- அழைப்பு நிலையத்தினூடாக (0112206300)
- தபால் மூலமாக: வாடிக்கையாளர் சேவை மற்றும் முரண் தீர்த்தல் பிரிவு, இல. 1161, மருதானை வீதி, கொழும்பு 08.
- கீழே தரப்பட்டுள்ள link/path ஊடாக சமர்ப்பிப்பு படிவத்தை பதிவிறக்கம் செய்யவும்.

https://www.plc.lk/wp-content/uploads/2023/02/Customer-Complaint-Grievance-Handling-Form.pdf

www.plc.lk ---> Quick Links ----> Stakeholder Feedback ----> Complaint & Grievances ----> Complaint & Grievances Submission Form (Download)

நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனத்தினால் திருப்திகரமான தீர்வு வழங்கப்படாவிடின், கீழே தரப்பட்டுள்ள வெளியக முரண் தீர்த்தல் திட்டங்களுக்கு தமது விடயத்தை கொண்டு செல்ல முடியும்;

**நிதிசார் நுகர்வோர் உறவுகள் திணைக்களம் (FCRD)**

பணிப்பாளர்
நிதிசார் நுகர்வோர் உறவுகள் திணைக்களம் (FCRD)
இலங்கை மத்திய வங்கி (CBSL),
No 30,
ஜனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01.

தொலைபேசி: 011 247 7966
கோரிக்கைகளுக்கான ஹொட்லைன்: 1935
ஃபக்ஸ் : +94 11 247 7744
மின்னஞ்சல் : fcrd@cbsl.lk
இணையம் : https://www.cbsl.gov.lk/en/fcrd

**நிதிசார் குறைகேள் அதிகாரி**

நிதிசார் குறைகேள் அதிகாரி,
143A, வஜிர வீதி,
கொழும்பு 05.

தொலைபேசி: 011 259 5624
ஃபக்ஸ்: (+94)11 259 5625
மின்னஞ்சல்: fosril@sltnet.lk
இணையம்: www.financialombudsman.lk